20.03.2025 **OS.No. 187/2014**
பி.சா.**2** பெயர்**:** கிருஷ்ணமூர்த்தி த/பெ**.** சின்னாகவுண்டர்
சாட்சி ஆஜர்**.** சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்**. 3**ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. 3ம் பிரதிவாதி சத்யா என்பவர் 1ம் பிரதிவாதி சிவக்குமார் மனைவி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சிவக்குமார் கீழ்குப்பம் கிராம சர்வே எண் 77/2A உள்ள சொத்தை பொறுத்து போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 91/2005 தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. மேற்படி வழக்கில் எனது மணிமேகலை 1ம் பிரதிவாதி நான் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். அதில் 3ம் பிரதிவாதியாக உள்ள ஜெயவேல் என்பவர் எனது மாமியாருக்கு அத்தை மகன் என்றால் ஜெயவேல் தெரியும் உறவு முறை பற்றி தெரியாது. மேற்படி வழக்கில் நான் வழக்கறிஞர் வைத்து வழக்கினை நடத்தி வருகிறேன் என்றால் வழக்கறிஞர் வைத்து வழக்கினை நடத்தினேன். மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. மேற்படி வழக்கு வாதி ஆஜரின்மையால் தள்ளுபடி செய்யப்பட்டு பின்னிட்டு கால தாமத மனு தாக்கல் செய்யப்பட்டு மனு எண் 1/2019 என அனுமதிக்கப்பட்டு உள்ளது என்றும் தள்ளுபடி உத்தரவை ரத்து செய்ய கோரி உள்ள மனு நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கில் நானும் எனது மாமியாரும் ஒரே வழக்கறிஞர் வைத்து நடத்தி வந்தோம் என்றால் சரிதான்.

2. வாதி சிவக்குமார் 2005ல் மன நிலை பாதிக்கப்பட்டு அவருக்கு பாதுகாவலராக 3ம் பிரதிவாதி சத்யாவை நியமிக்க கோரி மாண்புமிகு கிருஷ்ணகிரி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் மனு எண் 76/2007 தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. மேற்படி மனுவில் நீதிமன்ற உத்தரவு படியாக சிவக்குமார் சென்னை மனநல மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி மருத்துவ பரிசோதனையில் சிவக்குமார் 41 சதவீத மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பதாக மருத்துவ சான்று வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் சிவக்குமார் என்பவருக்கு மூத்த வழக்கறிஞர் திரு. எஸ். ரங்கநாதன் என்பவர் பாதுகாவலராக நியமனம் செய்யப்பட்டு இவ்வழக்கை நடத்தி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் சிவக்குமார் சார்பாக மூத்த வழக்கறிஞர் திரு. எஸ். ரங்கநாதன் எதிர்வழக்குரை தாக்கல் செய்து சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

3. இவ்வழக்கானது 2004ம் வருடத்தில் கிருஷ்ணகிரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்து பின்னிட்டு இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அசல் வழக்கு எண் 53/2004 என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கு தாக்கல் செய்தபோது கீழ்குப்பம் கிராம சர்வே எண் 77/2A உள்ள சொத்தை சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். 2ம் வாதி தனம் என்பவருக்கு கீழ்குப்பம் கிராம சர்வே எண் 79/1A2 உள்ள சொத்தை பொறுத்து இவ்வழக்கில் சேர்க்கபடவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 2ம் வாதி தனம் என்பவர் வாகித்அப்பாஸ் என்பவரை திருமணம் செய்து கொண்டு அவரது கணவர் வீட்டில் இறுதி வரை வாழ்ந்து இறந்து விட்டார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆரம்பத்தில் அசல் வழக்கினை எனது மாமியாரின் உடன் பிறந்த சகோதரிகள் தான் தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். பின்னிட்டு தனம் மற்றும் கோவிந்தம்மாள் இறந்த விட்டதால் அவரது வாரிசுகள் தரப்பினராக

சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பாதுகாவலர் மனு எண் 76/2007 மனுவில் எனது மாமியார் மணிமேகலை ஒரு தரப்பினர் என்றால் சரியல்ல. 2003ம் வருடத்தில் எனது மாமியார் கீழ்குப்பம் கிராம சர்வே எண் 77/2A உள்ள சொத்தின் ஒரு பகுதியை எவ்வித ஆவணமும் இல்லாமல் எனக்கு எழுதிக்கொடுத்து விட்டதால் அதை ஆட்சேபித்து சிவக்குமார் அ.வ.எண்.91/2005 ல் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சொத்து கேட்டுதான் வழக்கு தாக்கல் செய்தார். எனது கிரைய ஆவணம் பற்றி சொல்லவில்லை. மேற்படி வழக்கினை எனது கிரைய ஆவணத்தை ரத்து செய்து சிவக்குமாருக்கு சொத்தினை விளம்புகை கோரி தாக்கல் செய்துள்ளார் என்றால் அந்த வழக்கு பொய்யான வழக்காகும். சிவக்குமாருக்கு பாதுகாவலராக 3ம் பிரதிவாதி சத்யா நியமனம் கோரி மனுதாக்கல் செய்து, சிவக்குமார் மனநலம் பாதிக்கப்பட்டவராக மருத்துவ சான்று பெற்றுள்ள நிலையில் நான் எனது மாமியாரிடம் இருந்து கீழ்குப்பம் கிராம சர்வே எண் 77/2A உள்ள சொத்தின் மீத பகுதியை கிரையம் 2011ம் வருடத்தில் செய்து கொண்டுள்ளேன் என்று சொன்னால் கிரையம் பெற்றுள்ளேன். ஆனால் சிவக்குமார் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று எனக்கு தெரியாது.

4. மணிமேகலை பெயரில் கீழ்குப்பம் கிராம சர்வே எண் 77/2A உள்ள சொத்தினை பொறுத்து எந்தவொரு பதிவு ஆவணமும் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஏற்படவில்லை என்று சொன்னால் சரிதான். பதிவு செய்யப்படாத சீதன பத்திரம் இருந்தது. நான் சொல்லும் சீதன பத்திரம் எந்தவொரு நீதிமன்றத்திலும் ஆவணமாக ஏற்றுக்கொள்ளபடவில்லை என்று சொன்னால் சரிதான். UDR பட்டா வழங்கப்படுவதற்கு முன்பே சொத்தின் அனைத்து ஆவணங்களிலும் எனது மாமியாரின் தந்தையான முருககவுண்டர் தனது மகனான 1ம் பிரதிவாதி சிவக்குமார் பெயரை இணைத்து வருவாய் துறை ஆவணங்களை ஏற்படுத்தி உள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எனது மாமியாரின் சீதன பத்திரம் மற்றும் மூலபத்திரங்களை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. சீதனபத்திரம் தாக்கல் செய்துள்ளேன். ஆனால் குறியீடு செய்யப்படவில்லை. நான் வாடமங்கலம் கிராமத்தை சேர்ந்தவன் என்றால் சரிதான். என்னிடம் வேலை செய்யும் முருகனை வைத்து 3ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர், பெற்றோர் மீது வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் பாரூர் காவல் நிலைய குற்ற எண் 212/2009 என்ற முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து மேற்படி வழக்கில் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் நடந்த விவரத்தை சொன்னேன். மேற்படி வழக்கில் சத்தியா மற்றும் அவரது உறவினர்கள் குற்றவாளி அல்ல என்று மாண்புமிகு கிருஷ்ணகிரி மாவட்ட நீதிமன்றத்தில் தீர்ப்பாகி உள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நானும் எனது மாமியாரும் சேர்ந்து சத்தியா மற்றும் அவரது கணவர் மீது பாரூர் காவல்நிலையத்தில் 22 குற்ற வழக்குகளை ஏற்படுத்தி உள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அதில் 15 வழக்குகளில் சத்தியா கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு சென்றுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. என்மீது நான்கு குற்றவழக்குகள் சத்தியா புகாரின் பேரில் பாரூர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. குற்ற எண் 211 /2009 என்ற முதல் தகவல் அறிக்கையானது சத்தியா புகார் படியாக மணிமேகலை , கிருஷ்ணமூர்த்தி, நாகராஜ் மற்றும் மாது ஆகியோர் மீது பதிவு செய்யப்பட்டுள்ளோம் என்று சென்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. நான் LIC முகவராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். எனது காவல்துறை செல்வாக்கை பயன்படுத்தி சத்தியா மீது குற்றவழக்குகளை தாக்கல் செய்து, என் மீது தாக்கல் ஆன குற்றவழக்குகளில் இருந்து நான் தப்பித்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. சத்தியா பிரமாண வாக்குமூலத்தில் நான் தாக்கல் செய்துள்ள குற்ற வழக்குகளை பற்றி சொல்லி உள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கீழ்குப்பம் கிராம சர்வே எண் 77/2A சொத்து சம்பந்தமாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் WP No. 3129/2009 , WP No.42092/2009 , WP No.27826/2007 , CRL OPNo.13297/2009 ஆகிய மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றும் அதை மறைத்து நீதிமன்றத்தை ஏமாற்றும் நோக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி நீதி பேராணை மனுக்களில் நான் தரப்பினராக இருந்து வழக்கறிஞர் வைத்து ஆஜராகி வழக்கை நடத்தி உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கு சொத்து பொறுத்து தவறான விவரங்களை நீதிமன்றத்திற்கு சொல்லி வருகிறேன் என்றால் சரியல்ல. கீழ்குப்பம் கிராம சர்வே எண் 77/2A சொத்தை பொறுத்து எனது மாமியார் மணிமேகலைக்கு எவ்வித தனிப்பட்ட உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மணிமேகலைக்கு மேற்படி சொத்தில் தனித்த உரிமை இல்லாத நிலையில் எனக்கு மேற்படி சொத்தை கிரையம் கொடுத்துள்ள ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. சிவக்குமார் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பதை பயன்படுத்தி சொத்துக்களை அபகரிக்கும் நோக்கில்எனது பெயரில் கிரைய ஆவணங்களை மோசடியாக ஏற்படுத்தி உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஓம்/- திரு. முஹம்மது அலி, பி.எஸ்.சி. பி.எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.